15th March 1966]

பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரிகள்

*294 கேள்வி—திரு. சா. ராமசாமி: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள விஸ்தரிப்பு அதிகாரிகளில் சிலரை எடுத்துவிட அரசாங்கத்துக்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இவ்விஷயம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றது.

திரு. மு. பொ. வடிவேல்: சில ஆசிரியர்கள் கல்வி விஸ்தரிப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். எதிர் காலத்தில் அவர்களுக்கு ஏதேனும் ப்ரமோஷன் உண்டா? அவர்களுடைய எதிர்கால நிலை என்ன என்று அறியலாமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: விதிமுறைக்கு இணங்க அவர்களுக்கு ப்ரமோஷன் வசதி செய்யப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன்.

திரு. சா. ராமசாமி: இந்தப் பிரச்னை பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். எப்பொழுது பரிசீலனை முடிவடைந்து, முடிவு அமலாக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: பரிசீலனை முடித்தவுடனேயே முடிவுகள் அறிவிக்கப்படும்.

Compulsory donation

* 295 *Q.*—SRI M. KALYANASUNDARAM:
SRI M. KARUNANITHI:
SRI S. MADHAVAN:
SRI T. P. ALAGAMUTHU: } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have received any complaints regarding compulsory "donations" collected by Private Educational Institutions for new admission; and

(*b*) if so, the steps taken to prevent such collections?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) There are already instructions prohibiting collection of any sum other than special fees at the time of admission. When specific allegations of compulsory collection of amounts are received, action will be taken against those concerned by the Education Department.

திரு. செ. மாதவன்: கட்டாய வசூல் இல்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இப்பொழுது புதிய சட்டப்படி பள்ளி சம்பளம் இல்லாத சூழ்நிலை உருவாகி இருக்கிற காரணத்தினால், மறைமுகமாக நன்கொடை வசூல் செய்வதில்

[15th March 1966

ஈடுபடுவதற்கு முயற்சி செய்கிறார்கள். அதைப்பற்றி புகார் வந்திருக்கிறதா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பள்ளிக் கட்டடம் அல்லது வேறு செலவினங்களுக்காக நன்கொடை வசூலித்தால் அதை ஆட்சேபிக்கக் கூடாது. மாணவர்கள் மூலம் மாதம் தோறும் நன்கொடை வசூலிக்கப்படுகிறது என்று புகார் வந்ததன் பேரில், அம்மாதிரி நன்கொடை வசூலிப்பது ஆட்சேபகரமானது என்று பள்ளி நிர்வாகஸ்தர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. சா. கணேசன்: நன்கொடை என்பது எடுத்துக்காட்டுக் குறிக்குள், அதாவது இன்வர்ட்டட் கமாஸ்-குள் போடப்பட்டிருக்கிறது. நன்கொடை என்ற பெயரிலே வேறு தவறான முறையிலே வசூலிக்கப்படுகிறது என்பது கேள்வி கேட்டவருடைய நோக்கமாக இருக்கும் என்று அனுமானிக்கிறேன். அதே மாதிரி புகார் சர்க்காருக்கு வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால், அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஒரு பயிற்சிப் பள்ளியில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு, அந்தப் பயிற்சி பள்ளிக்கு இவ்வளவு நன்கொடை கொடுத்தால்தான் இடம் உண்டு என்றால் அம்மாதிரி நன்கொடை வசூலிப்பது ஆட்சேபகரமானது. அம் மாதிரி புகார் வரும் போதெல்லாம் அரசாங்கம் விசாரித்து நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன்: பாடசாலைகளில் நன்கொடை வசூலிப்பதற்கு கட்டம் போடப்பட்ட கார்டுகள் கொடுத்து, மாணவர்கள் மூலம் வசூல் செய்வது தடைக்குரியதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மாணவர்கள் மூலமாக எதையும் வசூலிக்கக்கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் முடிவு.

திரு. செ. மாதவன்: தனியார் நடத்தக்கூடிய ஆசிரியர் பயிற்சி பள்ளிகளில் எத்தனை ஆசிரியர் பயிற்சி பள்ளிகள் இப்படிப்பட்ட நன்கொடை வசூல் பண்ணினார்கள் என்று புகார் வந்திருக்கிறது? அதில் எத்தனை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எத்தனை என்று என்னிடம் தகவல் இல்லை. சில ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் மீது புகார் வந்து, அது விசாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. சமீபத்தில் ஒரு மகளிர் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியையைப் பற்றிப் புகார் வந்திருக்கிறது. அது இப்பொழுது விசாரணைக்காக டைரக்டர் அவர்களுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது.

15th March 1966]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தனியார் பயிற்சிப் பள்ளி, உயர் நிலைப் பள்ளியில்கூட ஆண்டு ஒன்றுக்கு ஆரம்ப நாட்களில் ரூ. 100 கொடுத்தால்தான் அட்மிஷன் என்று சொல்லுகிறார்கள். அப்படி நடத்துகிற இடங்களைப் பற்றி சர்க்காருக்கு புகார் செய்தால் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு புகார் வந்தால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. சில பள்ளிகளைப் பொறுத்த மட்டில் மேலும் புதியதாக வகுப்புகளைச் சேர்த்துக்கொள்வதற்கு அனுமதி இல்லை என்று கூட உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

திரு. சா. கணேசன் : இம்மாதிரி புகார்களெல்லாம் ஏற்படாமல் இருப்பதற்காக தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பின்தங்கியவர்களுக்கு அந்த வட்டாரத்தை சுற்றி இருக்கிறவர்களுக்கு என்று எண்ணிக்கை வகுத்துவிட்டு, எல்லோரும் அப்ளிகேஷன் போட்டு, மார்க் அடிப்படையில்தான் எடுத்துக்கொள்ளப்படும். அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அப்ளிகண்ட்ஸ் பெயர், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பெயர், மார்க்கு ஆகியவைகளைக் கொண்ட ஒரு லிஸ்டு தொங்கவிடவேண்டும் என்று ஒரு வரையறை செய்வது பொருத்தமாக இருக்கும். அதேமாதிரி ஏற்கனவே டாக்டர் அழகப்ப செட்டியார் காலத்தில் காரைக்குடி என்ஜினியரிங் காலேஜில் செய்து கொண்டிருந்தோம். அது மாதிரி செய்தால் இம்மாதிரி புகார்களுக்கு இடம் இருக்காது என்று கருத்தில் கொண்டு இதைச் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்ஜினியரிங் காலேஜ் வேறு விஷயம். பயிற்சி பள்ளி, உயர்நிலைப் பள்ளி, செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சி பள்ளி இவைகளிலே மார்க்கு மட்டும் எடுத்துக் கொள்வது என்பது அல்ல. தாழ்த்தப்பட்டவர்கள், பின்தங்கியவர்களை சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. வேறு பல வகையிலேயும் கவனம் செலுத்தப் பட்டு வருகிறது. இம்மாதிரி சில புகார்கள் வருகிற காரணத்தினால் புதிய தனிப்பட்டவர்கள் பயிற்சி பள்ளிகளுக்கு அனுமதி கொடுப்பதில்லை என்றும் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

திரு. செ. மாதவன் : ஆசிரியர்கள் பயிற்சி பள்ளிகளில் இப்படிப் பட்ட ஊழல்கள் இருக்கின்றன என்று முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே, இந்தப் பள்ளிகளுக்கு செலெக்ஷன் செய்வதை சர்க்கார் மூலம், சர்க்கார் ஆசிரியர் பயிற்சி பள்ளிகள் சம்பந்தமாக செய்வது போல், செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிப்பட்டவர்கள் பள்ளி, அல்லது கல்லூரியாக இருந்தால், அதற்காக அரசாங்கமே ஒரு கமிட்டி நியமித்து மாணவ மாணவிகளை சேர்த்துக்கொள்வது, இப்பொழுது இருக்கிற சட்டங்களுக்கும், விதிகளுக்கும் புறம்பானது என்று சர்க்கார் கருதுகிறது.

[15th March 1966

திரு. ஆ. தங்கவேலு : திருச்சி பெரியார் பயிற்சிப் பள்ளியில் மாணவர்களிடமிருந்து ரூ. 500 நன்கொடை வசூல் செய்யப்படுவதாக அரசாங்கத்திற்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்தப் பள்ளி மீது புகார் வந்திருக்கிறது என்பதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இந்த நன்கொடை அவசியம் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்துவதன் காரணத்தினுல் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பள்ளியில் சேர முடியாமல் இருக்கிறது. அதை நீக்குவதற்கு அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவிகள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்று அங்கத்தினர் அவர்கள் கூறுகிருர்கள். இனி புதியதாகப் பள்ளிகள் அமைக்கப் படுவதில்லை. தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்பட முடியாத நிலையில் இருந்தால், அரசாங்கமே பயிற்சிப் பள்ளிகளை தொடங்கி நடத்தவேண்டும் என்று கருதுகிறோம்.

Private Educational Institutions

* 296 *Q*.—SRI V. SANKARAN :
SRI S. MADHAVAN : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Union Government have asked the State Government to enact legislation to control and regulate the working of private educational institutions in the State; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The Government of India have forwarded a copy of a model Bill for the regulation and control of private educational institutions, for consideration and necessary action. The scope of the model Bill is limited only to those unrecognised educational institutions which claim to prepare students for recognised degrees, diplomas and certificates.

திரு. செ. மாதவன் : தனியார் நடத்தக்கூடிய பள்ளி நிறுவனங்களிலே ஊழல்கள் நடைபெற்றுல், அதைத் தடுப்பதற்கு இந்த சட்டத்தில் இடம் இருக்குமா அல்லது கல்வித் திட்டங்களை மட்டும் பரிசீலிப்பதற்கு இந்தச் சட்டத்தில் இடம் இருக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முக்கியமாகப் பல்கலைக் கழகங்கள் அங்கிகாரம் இல்லாமலேயே பள்ளிகள் நடத்தி டிக்ரி கொடுத்துக்கொண்டிருக்கிருர்கள். அம்மாதிரி பிரைவேட் காலேஜ்கள் சரியான வகையிலே நடத்தப்படுவதற்கு வகை செய்வதற்கு அவர்கள் அனுப்பியது இந்த மாடல் மசோதா.